**தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம்**
கோயம்புத்தூர் - 641 003

முனைவர் மா. ராஜவேல், Ph.D.
மக்கள் தொடர்பு அலுவலர்
கைப்பேசி: 94890 56730

தொலைபேசி: 0422 - 6611302
நிகரி: 0422 - 2431821
மின்னஞ்சல்:pro@tnau.ac.in

---

பெறுநர்,                                                                 தேதி: 22.07.2025
ஆசிரியர்,
ஐயா,

கீழே குறிப்பிடப்பட்டுள்ள செய்தி விவரத்தினை தங்களது மேலான நாளிதழில் பிரசுரிக்குமாறு அன்புடன் வேண்டுகிறேன்.

# தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகத்திற்கு நானோ களைக்கொல்லிக்கான காப்புரிமை

தமிழ்நாடு வேளான்மைப் பல்கலைக்கழகம் நானோ தாவரவியல் களைக்கொல்லி கண்டுபிடிப்பிற்கான காப்புரிமையை இந்திய அரசின் காப்புரிமை அலுவலகத்தின் மூலம் சமீபத்தில் பெற்றுள்ளது. இந்த நானோக்களைக்கொல்லி முனைவர் என். ஸ்வாதிகா முனைவர் கே. எஸ். சுப்பிரமணியன் மற்றும் முனைவர் எஸ். மாரிமுத்து ஆகியோரால் கண்டுபிடிக்கப்பட்டது.

இந்த காப்புரிமை, வேளாண் நானோ தொழில்நுட்ப மையத்தில் முனைவர் பட்டம் பெற்ற மாணவி நடத்திய ஆராய்ச்சியின் அடிப்படையில் ஒரு புதிய களைக்கொல்லியை இயற்கை தாவர இரசாயனங்களிலிருந்து உருவாக்கியதன் மூலம் பெறப்பட்டது. அல்லெலோபதி கலவைகள் என்று அழைக்கப்படும் இந்த இரசாயனங்கள், யூகலிப்டஸ் சிட்ரியோடோராவிலிருந்து பிரித்தெடுக்கப்பட்டன, இது யூகலிப்டால் மற்றும் சிட்ரோனெல்லல் போன்ற பொருட்களை வெளியிடும் ஒரு மரமாகும். இது அருகிலுள்ள தாவரங்களின் வளர்ச்சியை இயற்கையாகவே அடக்குகிறது. இந்த அதிக ஆவியாகும் சேர்மங்களைப் பாதுகாக்க, ஆராய்ச்சி குழு நானோ தொழில்நுட்பத்தின் மூலம் இயற்கையான பயோபாலிமரான கொத்தவரையில் இருந்து எடுக்கப்பட்ட பிசினை பயன்படுத்தி இந்த நானோ களைக்கொல்லியை தயாரித்துள்ளது.

இவ்வாறு தயாரிக்கப்பட்ட நானோ–களைக்கொல்லி களைச் செடியின் விதைகள் முளைப்பதற்கு முன்னும் மற்றும் களைச்செடி முளைத்த பின்னும் கட்டுப்படுத்துகிறது. இந்த களைக்கொல்லியை 1000 பிபிஎம் என்ற அளவில் நெல்வயல்களில் காணப்படும் மிக முக்கிய களைச்செடியான குதிரைவாலி புல்களில் பயன்படுத்தியபோது அவற்றின் விதைகள் முளைப்பதற்கு முன்னும் மற்றும் முளைத்த பின்னும் வெற்றிகரமாக கட்டுப்படுத்தியது.

**மக்கள் தொடர்பு அலுவலர்**